2 அணா

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | 4 — 6 — 54 | வெள்ளி | ஒலி 10

# எதையும் தாங்கும் அந்த இதயம்!

கூரிய முட்கள் கைகளை கீறிடினும் மலர் கொய்யத் தாவும் குமரியின் கரங்கள.

மூச்சை நிறுத்திவிடும் பயங்கர அலைகள் இருப்பினும் முத்தெடுக்க நினைக்கும் மனித உள்ளம்.

பாறைகள் இடிந்து உடலை நசுக்கி விடும் என்பதறிந்தும் பொன் னெடுக்க சுரங்கம் தோண்டும் மானிட ஜாதி.

மலரும்—முத்தும்—பொன்னும் இலட்சியங்களாகின்றன. முள்ளும்— கடலும்—பாறையும் இடையூறுகளாகின்றன. இடையூறுகளுக்கு அஞ்சாதபண்பு கொண்டவன் இலட்சியப் பாதையை நோக்கி நடந்தபடி யிருக்கிறுன்.

'இடுக்கண் வருங்கால் நகுக' இந்தக்குறள் அவன் மூச்சு.


'இலட்சியமே என் உயிர்' இது அவன் பேச்சு.

கொடுமைகள் கோர நர்த்தனம் செய்யும்போதும் அவன் குதூகலமாகத்தான் தன் பயணத்தை நடத்துவான்.

தன் எதிரே தனக்குத் தடையாக நிற்கும் மனிதர்களை அவன் மாமிச மலையென்பான். நசுங்கிப் போன ஈயச் செம்பே! என நையாண்டி செய்வான்.

"என்னை இப்படிப்பேசச் சொல்வது இதயத்தில் பீறிடும் இருமாப்பல்ல! உன் கண்களிலே தாண்டவமாடுகிறதே ......அந்த காரம்! உன் உதடுகளின் இடுக்கில் வழிகிறதே அந்த அலட்சியம்! உன் உள்ளத்தில் பொங்குகிறதே அந்த நஞ்சுக் குழம்பு! இவைதான் என்னை அமைதி இழக்கச் செய்கின்றன" என்று தன் ஆத்திரத்திற்கு விளக்கம் கூறுவான்.

அவன் புகழுக்காக ஆசைப்பட்டு பொதுநலப் பணியில் குதிக்கவில்லை. அவனுக்குத் தெரியும் அந்த வேலை சறுக்கு மரம் ஏறும் கதையென்று! அவனறிவான் பொதுப்பணி — குமுறிவரும் வெள்ளப் பெருக்கில் எதிர் நீச்சல் போடும் செயல் என்று! எதிர் இயக்கத்தார் ஏவுகிற கணைகள், சொந்தக்காரர்கள் சொருகுகிற ஈட்டிகள் —இவைகளை எதிர் பார்த்தே அந்த இலட்சியக் காரன் களத்தில் உலவுகிறுன்.



பாசிபிடித்த ரத்தக் குட்டைகளாக — உளுத்துப்போன எலும்புக் கூண்டுகளாக — செல் மொய்த்த நரம்புக் கூடுகளாக மக்கள் வாழ்வது அவனுக்குப் பொறுக்க முடியவில்லை.

வாழ்வதற்குப்பகையாக இருக்கும் அத்தனை 'சக்திகளையும் அவன் நேர் நின்று தாக்குகிறுன். மகாத்மாக்கள் போற்றி வந்த மதமா? மரவுரி தரித்த நாள்முதல் வணங்கி வந்த கடவுளா? மதத்தின் தலைவர்களா? கடவுளின் பிரதிநிதிகளா? அத்தனையும் அவன் சிந்தனைப் பட்டரையில் தூள்! தூள்!

சமுதாய துரோகிகள், சுயநல பெருச்சாளிகள், இலட்சிய முத்திரை குத்திக் கொண்டு இழி தொழிலில் ஈடு படுவோர், பரிகசிப்போர், பின்னிருந்து பேசுவோர், உறுமுவோர், உதைப்பேன் என்போர்; இந்த பட்டியல் அவன் உறுதியின் முன்னே எரிந்து கருகும்.

"பார்! பார்!..........பசலைப் பயலே! உன் செல்வாக்கை செல்லாக்காசாக்குகிறேன்" எனக் குமுறும் ஒரு பொறாமை உருவம்.

"நான் உன்னைப்போல் புகழில் நெளியும் பூச்சியல்லவே! நீ எனக்குத் தோண்டும் குழி உன்னையும் உன்போன்ற சதைக் குன்றுகளையும் விழுங்கி ஜீரணித்து என் அழியாத ஜீவனுக்கு அஸ்திவாரமும் அமைக்கும்" என்று வீரமுழக்கம் செய்வான.

இதோ பாரப்பா ........ மாட மாளிகை. மரகதக் குவியல், மனதிற்கேற்ற உல்லாச புரி. இங்கே வந்தால் மல்லிகையில் படுக்கலாம், வெல்வெட்டுக் கம்பளத்தில் நடக்கலாம், என்ற மோகவலை வீசப்படும். துறவியைப் போல பேசிநாரநிற்பான் இலட்சியவாதி.

காயமே இது பொய்படா — காற்றடைத்த பையடா என்ற 'நீர்மேற்குமிழி பஜனை' நடத்திக் காட்டப்படும்.

கண்மூடிகளிடம் காட்டப்பா உன் கைவரிசையை எனக்கேலி செய்வான். எச்சரிக்கை— அபாய அறிவிப்பு — பாகு மொழி — பாசாங்குவேலை இத்தனை உருவங்களில் அழிவு அவனை அண்ட வருகிறது.

ஆனால் அந்த இலட்சிய வீரன் தன் பாதையிலேயே போகிறுன் — போகிறுன் — பேசக் கொண்டே இருக்கிறுன்.

★ ★ ★

## பட்டம் விடுகிருர்கள்!

★ ★ ★

"பட்டம் தரப் போகிருர்களாம்?"
"யாருக்கு, எங்கே, எப்போது?"

"வருகிற ஆகஸ்டு 15ல் 'பாரத் ரத்ன' 'பத்த விபூஷண்' பட்டங்கள் தரப் போகிருர்களாம். தென்னட்டில், விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலருக்கு இப்பட்டம் கிடைக்குமாம்— அதில் மதுரை வைத்திநாதய்யர் பெயர் அடிபடுகிறதாம்! அரசியல் வட்டாரத்தில் பேசிக் கொள்ளப்படுகிறது. 'பாரத ரத்ன' கிடைக்காவிட்டாலும் 'பத்தவிபூஷண்'பட்டம் நிச்சயம் அவருக்குத்தானும்! இப்போது முதற் கொண்டே அதற்கான சிபாரிசுப் படலங்களெல்லாம் தொடங்கி விட்டனவாம். ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் கொடுப்பதாக இருந்த இந்தப் பட்டங்களை இந்த ஆண்டு மட்டும் ஆகஸ்டு 15ல் தொடுக்கப் போகிருர்களாம்!"

"பாவம், மதுரைத் தீயின் ஜுவாலையிலே தன் மந்தகாச முகத்தை டில்லிக்குக் காட்டிக் கொண்டதற்காகவாவது ஒரு பட்டம் கொடுக்கத்தானே வேண்டும்!

"வைத்திநாதய்யருக்கு ஆச்சு; சட்டசபை காரியதரிசி கிருஷ்ணய்யர்?"

"கிருஷ்ணய்யரென்ன, ருக்மணி அருண்டேலுக்குக்கூட ஒரு 'சான்ஸ்' இருப்பதாகக் கேள்வி!"

"உம்—என்னமோ போங்கள்; பாட்டாளிகளின் பெரு மூச்சுக் காற்றிலே, வேலையற்றோரின் நரம்பு நூல்களிலே— பாரதத் தலைவர்கள் பட்டம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்!"

# மலையே சரிகிறது; மணல் மேடுகள் என்னவது?

பெரிய மனிதர்!

பெருமளவிற்கு செல்வாக்குப் பெற்றவர்!

வேற்றுரை விரட்டியடித்தவர்!

வெம்பும் நிலையிலிருந்த தன் தாயகத்தை பக்குவம் செய்து பழுக்க வைத்தவர்!

பதவியை இழந்துவிட்டார்—ஆமாம், பதினேழு ஆண்டுகளாக தொடர்ந்து பிரதமர் பதவி வகித்த ஐரிஷ் தலைவர் டிவேலரா அண்மையில் நடைபெற்ற தேர்தலில் மெஜாரிடி இல்லாமல் பதவியை இழந்துவிட்டார். பதவியை இழந்தது அவர் மட்டுமல்ல—அவருடைய கட்சியே மக்கள் மன்றத்தின் செல்வாக்கை இழந்து அதிகாரத்தை பறிகொடுத்துவிட்டது. அந்நியரின்பாதம் பட்டுப் பட்டு கன்னிப்போன நாட்டை மீட்டவர்தான் டிவேலரா—தாயகத்தின் விடுதலைக்கு தளராது உழைத்த கட்சிதான் அவர்தம் கட்சி—என்றாலும் செல்வாக்கு நழுவ விடப்பட்டுவிட்டது. மக்கள் செய்துவிட்டார்கள் அவ்வாறு! டிவேலராவின் இந்த 'வீழ்ச்சி' எங்கெங்கே மக்கள் மனம் பொல்லாதது என்று எண்ணக்கூடிய ஜனநாயவாதிகள் இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் பீதி தந்திருக்கிறது. 'அவருக்கே இக் கதி என்றால் நாம் எந்த மூலைக்கு' என்று அச்சத்தின் முற்றுகைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் அவர்கள். ஆனால் இந்நாட்டு மக்களின் துரதிர்ஷ்ட வசமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே காங்கிரஸ்காரர்கள்—அவர்கள் மட்டும் இந்த உண்மையை — மக்கள் 'நீறுபூத்த நெருப்பு, போன்றவர்கள் என்ற அனுபவ உண்மையை உணர்ந்து கொள்ளமாட்டார்கள். இல்லாவிட்டால், இரண்டாம் உலகப் போருக்குப்பின் நிகழ்ந்த சர்ச்சிலின் 'பல்டி' யே இந்த 'சர்க்கா தூக்கி' களை சிர்திருத்தியிருக்காதா? “காங்கிரஸ் தோழர்களே, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மானத்தைக் காப்பாற்றியமேதை சர்ச்சிலையே மறு ஆண்டு மண்கவ்வ வைத்தார்கள் பிரிட்டிஷ் மக்கள்; எனவே உணர்ந்து நடங்கள்- உண்மையைச் சொன்னால் உடம்பெறிச்சல் கொள்ளாதீர்கள். சிங்காதனங்கள் சங்கப் பலகைகள் போன்றவை” என்று எச்சரித்திருக்கிறோம். அந்த நல்லுபதேசங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளி 'நாலாயிரம் தொகுதிகளுக்கு நானே அபேட்சகன்,” “தேர்தல் வரும், போகும்—ஆனால் காங்கிரஸ் தான் ஆட்சி பீடத்தில் இருக்கும்” என்று இறுமாப்பு மொழி பகன்றார்கள்—மாற்றுக் கட்சிக்காரர்களை கசக்கி எரிந்தார்கள். ஆனால் டிவேலரா கண்ணீர் வடிக்கிறார் துப்பாக்கி பிரயோகம் செய்யாத டிவேலரா, துவளத் துவள மக்களை தடிகொண்டு தாக்காத டிவெலரா, மாற்றுக் கட்சிக்காரர்களை மனம் போனபடி திட்டாத நாகரிகமனிதன் டிவேலரா பதவியை இழந்தார்-அவரது கட்சி ஆதிக்கத்தை இழந்தது—ஆமாம் மக்களுக்கு அவரது ஆட்சி சலித்துப்போய் விட்டது-பதினேழு ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்திய கட்சியல்லவா அது! இதை கோலேந்திகள் உணரவில்லை.

மக்களின் நலத்திலேயே நாட்டம் கொண்டிருந்த கட்சியின் ஆட்சியே மக்களுக்கு வெறுப்புத் தட்டிவிட்ட தென்றால் — மண்டை ஓட்டையும் எலும்புக் கூட்டையுமே கட்சியின் சின்னமாக வைத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு நாட்டை ரணகளமாக்கிவரும் கட்சிகள் பதினேழாண்டுகளா நிலைக்கப்போகிறது! — அதுவும், “எங்கள் இராமன் புஷ்ப வாகனத்தில் போகவில்லையா, பறவைக் கப்பலென்ன அதிசயம்” என்று சொல்லுகிறவர்கள் நிறைந்த கட்சியை - கண்ணுக்குத் தெரியும் குயீன் மேரிக் கப்பலை மறந்து குகனின் படகைப் பற்றி பேசிப் பேசி பொழுதைப் போக்குகிற காங்கிரஸ் கட்சியையா பொதுமக்கள் அவ்வளவு ஆண்டுகளுக்கு நீடிக்கச் செய்யப் போகிறார்கள்! — நிச்சயம் அவர்களுக்கு பாடம் கற்பிக்கப்படும் - அதிலே தென்னாடுதான் முன்னணியில் நிற்கும் என்பது உறுதி. நேருவுக்குத் தெரியும்; காந்தியார் கூடச் சொல்லிப்போயிருப்பார் - வங்கத்திடமும், சென்னையிடமும் வாலாட்டாதே சீடனே, அவர்கள்வம்புக்கு வரமாட்டார்கள், வந்ததை விட மாட்டார்களென்று! என்றாலும் நாம் சுட்டிக் காட்டுகிறோம் 'அதோபாருங்கள்டிவேலராவை' என்பதாக!

— தென்னரசு

விரைவில் ஆரம்பமாகிறது

?

மு. க. வின் புதிய
தொடர் கதை

# காய்பவரே! கவனியுங்கள்!!

“அவதாரபுருஷன்” என்ற தலைப்பிலும், “ராமாவதாரம்” என்ற தலைப்பிலும், இன்னோரன்ன தெய்வீகத் தலைப்புகளிலேயும் ராமனுடைய வரலாற்றுப் புராணம் எழுதியவர்கள் எல்லாம் திடுக்கிடும் வகையிலே, புதியதோர் தலைப்பிலே திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் (மே.23) கல்கிஏட்டிலே ராமனது சரித்திரம் எழுதத் துவங்கி யிருக்கிறார். தலைப்பு, 'சக்கரவர்த்தி திருமகன்' என்பது! நாமெல்லாம் ராமனை சாதாரண ஒரு ராஜகுமாரன் என்றும், ராமாயணம், அந்தராஜ குமாரனின் செயல்களை மிகைப்படுத்திக் கூறும் புகழ்மாலை என்றும், பற்பல ஆதாரங்களுடன் எடுத்துக் கூறிய போதெல்லாம் நம்மீது சீறி விழுந்தவர்கள், இதோ, ஆச்சாரியார் கூறுகிறாரே; 'சக்கரவர்த்தி திருமகன்' என்று; அதற்கு என்ன பதில் கூறுவார்களோ தெரியவில்லை. தலைப்புடன் விடவில்லை ஆச்சாரியார் - உள்ளேயும் எழுதுகிறார் கவனியுங்கள்!

“கர்ண பரம்பரையாக முன்னமே இருந்த ராம சரித்திரத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு வால்மீகி பகவான், நூல் வடிவம் கொடுத்தாற் போல் தோன்றுகிறது; இதனாலேயே கதையில் பல சிக்கல்கள் ஏற்பட்ட தென்றும், ஊகிக்கலாம். வாலியைக் கொன்ற முறை; அதில் நாம் காணும் நியாயக்குறை—சீதையைக் காட்டுக்கு அனுப்பிய அநீதி—இவை போன்ற இன்னும் பல சிக்கல்கள். வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமன் ஒரு மகா புருஷன். ஈஸ்வர அவதாரமாக வைத்து எழுதவில்லை.”

ராமாயணத்தின் விரோதி அல்ல இதை எழுதுவது! சிவபக்தரும் அல்ல! வைணவ சிரேஷ்டர் ஆச்சாரியார்தான் எழுதுகிறார். வால்மீகி, ராமனை மகாபுருஷன்—அதாவது பெரிய மனிதன்—அல்லது வீர தீரமுள்ள பெரு மனிதன்—என்ற முறையில் தான் சித்தரித்திருக்கிறாராம்; ஈஸ்வர அவதாரமாக அமைத்திட வில்லையாம்! இன்னும் கூறுகிறார் கவனியுங்கள்.

“வால்மீகி ராமாயணம் இயற்றிப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, கம்பரும்துளசிதாசரும், ராமாயணம் பாடினார்கள். இதற்குள் மகா விஷ்ணுவின் அவதாரமே ஸ்ரீராமன் என்பது நன்றாக ஊர்ஜிதப்பட்டுப்போன கொள்கையாகிவிட்டது.”

“மக்களுடைய நம்பிக்கையும் வழிபாடும் இவ்வாறு பரிணமித்துவிட்ட பிறகு கம்பரோ துளசிதாசரோ—மீண்டும் ராமனை எப்படி வெறும் வீரனாக வைத்துப் பாட இயலும்?”

ராமன், வெறும் வீரன் தான்! மக்களின் மனப் பண்போடு ஒட்டிப்போய் அவர்களது பாராட்டுகளைப் பெறுவதற்காக, ராமனைக் கம்பர் கடவுள் அவதாரமாக ஆக்கிக் காட்டினார் என்று ஒத்துக் கொள்கிற ஆச்சாரியார், கம்பன், அப்படி மக்கள் போக்கிலே போனது சரி என்றும் வாதிடுகிறார். அவரே ராமனை அவதாரம் என்று ஒத்துக் கொள்ளவில்லை — அவரே வாதிடுகிறார், கம்பன் காலத்துக்கேற்றபடி நடந்தது சரி என்று! வால்மீகி ராமாயணத்தை திருத்தி எழுத கம்பனுக்கு உரிமை உண்டு! கம்பராமாயணத்தை காலத்துக்கேற்றபடி திருத்தி எழுத “ராவணகாவியம்” எழுதிய புலவர் குழந்தைக்கு உரிமை இல்லையே — அதுஏன்?

காலத்துக்கேற்றபடி எழுத கம்பனுக்கு மட்டுந்தான் தனி உரிமையா? — ஆச்சாரியார் விளக்குவாரா?—அவர் விளக்கினாலும் விளக்காவிட்டாலும் நம்மைக் காய்பவர்கள் கவனிப்பார்களா இந்த முரண்பாடுகளை! இராமன் அவதாரமில்லை—ஆச்சாரியார்கூறுகிறார் —வால்மீகியை ஆதாரங்காட்டி!

ராமாயணத்தின் கர்த்தா வால்மீகி! ராம பக்தர்களே! இப்போது என்ன சொல்கிறீர்கள்? இன்னும் எம்மீது காய்ந்து விழத்தான் போகிறீர்களா? அல்லது சிந்திக்கப் போகிறீர்களா? சொல்லுங்கள்!

முரசொலி

ஆண்டு சந்தா ரூ. 6-0-
ஆறு மாத சந்தா ரூ. 3-8-

ஆறு மாதத்திற்கு குறைந் சந்தா ஏற்றுக் கொள்ளப்ப மாட்டாது.

# கலையங்கம்

சென்னை (4—6—54) வெள்ளி


# கொள்கை வீரா! குமார வேலா!

கல்லக்குடி அறப்போரிலே ஈடுபட்ட காளை—தோழர் குமார வேல் மறைந்து விட்டாராம்—நம்ப முடியவில்லையே, இந்த நெஞ்சு துளைக்கும் செய்தியை! அய்யகோ குமாரவேல் போய்விட்டாராமே; அந்தோ அந்த ஆர்வத்தின் குன்றம், சரிந்து சிதறி விட்டதாமே— உண்மைதானும்—உண்மைதானும்—அந்த உத்தமத் தோழன், 27-5-54 வியாழனன்று உயிரை விட்டுவிட்டானும்.

ஆச்சாரியார் தனது அடக்குமுறை ஆட்சியிலே அடுக்கிக் காட்டிய ஆறு பிணங்கள் போதாதென்று, சிறைச்சாலைக் கொடுமை யால் எங்கள் குமார வேலையும் சீரழித்து—இதோ ஏழாவது பிணத்தை காமராசர் முன்பாக வீசியெறிந்து விட்டார்.

கல்லக்குடி அறப்போராட்டத்தில் முன்வரிசையிலே வந்து நின்ற நண்பர் குமாரவேல்—ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையை அகமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு எம்மோடு சிறைதனில் இருந்தவர். அவர்தான் பிணமாகிவிட்டாராம்—பெருமூச்சோடு வரும் செய்தி புயலென நம் உள்ளத்தில் புகுந்திடுகிறது!

ஏழைப்பெற்றோர்—அவர்களின் செல்வத்திருமகன்—எங்கள் சிந்தை யெல்லாம் நிறைந்துவிட்ட அந்தக் கொள்கைச் சிங்கம். ஆலையிலே அந்தத் தோழனுக்கு வேலை! அதைக் கொண்டு பிழைக்கும் அந்தக் குடும்பம். அந்த நல்ல குடும்பத்தின் இளம் விளக்கு—நம் இதய விளக்கு—குமாரவேல்! அவரை நோய் விழுங்கிவிட்டதாம்! ஆறு உயிர்களை அறப்போராட்ட தினத்திலே துப்பாக்கி ரவைகள் விழுங்கின. அந்த ரவைகள் ராசகோபாலரின் ஆட்சி பீடத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய ரவைகள்! அதே பீடத்திலிருந்து புறப்பட்ட பொல்லாத கொடுமைதான்-துப்பாக்கி ரவையாக அல்ல; தொல்லைதரும் நோயாக உருவெடுத்து எங்கள் குமார வேலனின் உயிரைக் கொத்திக் கொண்டு போய்விட்டது! சிறைச்சாலையிலே வந்து நுழையும்போது உருக்குலையாத மேனி யனுய்—உற்சாகம் இழக்காத உள்ளத்தினனுய்த்தான் — அந்த நண்பன் இருந்தான். சிறைச் சோறும், கொடுமையும் அவன் உடலைத்தாக்கியது! உள்ளமோ அந்தக் கொடுமைகளை எள்ளி நகை யாடியது--"தண்டவாளத்தில் தலைவைத்தோமே; அந்த நேரத்திலே செத்தாலும் செத்திருக்கத்தானே போகிறோம்; சிறைச்சாலையிலே செத்தால் என்ன" என்று அடிக்கடி கூறிக்கொண்டிருப்பார், நோயால் அவர் அவதியுறும் போது—நாங்கள் அவரைப் பார்த்து கவலைப்படும்போது! அத்தகைய அஞ்சாப் பண்பும், குறையா ஆர்வமும் பெற்ற கொள் கைத்தீபம் ஒன்று அணைந்துவிட்டது. இரு பத்தைந்து வயதுகூட நிரம்பாத வாலிபர்—காணக் கவர்ச்சி தரும் முகம்-கழகத்தின் கொள்கைகளைப் பற்றி தணியாத உணர்ச்சி யோடு, சலியாமல் பேசிக் கொண்டிருக்கும் பண்பு! அவரைத்தான் திருச்சி சிறைச்சாலை ஜனவரி 15-ம் நாள் விழுங்கியது! ஆனுல் அவரை வெளியே அனுப்பும் போது க்ஷய ரோக வியாதியை அவருக்கு துணையாக அனுப்பியது. வெளிவந்தநாள் முதல் படுக்கை யிலேயே இருந்தார். மணப்பாறை தி. மு. கழ கத்தினரும், தோழர் இளமுருகுபொற்செல்வி யும் அவரது நோய் போக்கும் பணியிலே தீவிரமாக ஈடுபட்டனர். நன்கொடைகள் வசூ லித்து, தம்மூர்ச்செல்வரை சாவிலிருந்து எப்படியும் மீட்டிட வேண்டுமென்று துடித் தனர்-ஆனுல்-குமார வேலைத் தாக்கிய நோய், அவரை அந்த அருமைமிகு நண்பர்களிட மிருந்து பிரித்துக் கொண்டு போய்விட்டது!



தோழனே! குமாரவேல்! நீ மறைந்து விட்டாய்! சிறைச்சாலையிலே உன்னோடு சிரித்து மகிழ்ந்த அந்த நாட்களை எச் கொண்டால் இருதயம் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்படு கிறதே! என் கூண்டுக்குப் பக்கத்துக் கூண்டிலே நீ அடைபட்டி ருந்த அந்தக் காட்சியும்—இரவு நேரங்களிலே இருமல் உன்னைக் கொட்டும் போது, நீ அனுபவிக்கும் அவதியும்-அதை நினைத்து நினைத்து கூண்டுக் கம்பிகளில் தலையைச் சாய்த்தவாறு, "ஏ தாயகமே! உன் விடுதலைக்காகப் போரிடும் வீரர்கள் அனுபவிக்கும் சித்ரவதையைப் பார்!" என நான் ஏங்கியதும்-இப்போதும் என் கண்களைக் குளமாக்குகிறதடா; அழகான வாலிபனே! சிறைச் சாலையின் ஆரம்ப காலத்திலே—நோய் உன்னை நெருங்காமல் இருந்த நேரத்திலே எத்தனை எத்தனை கிண்டல்கள் செய்வேன் உன்னைப் பார்த்து! — அப்போதெல்லாம் ஒரு அன்பான சிரிப்பால் என் இருதயத்தைக் குளிப்பாட்டி விட்டு நிற்பாயே; அந்த நிகழ்ச்சி யெல்லாம் இனி என் விழிகளை நீர் வீழ்ச்சிகளாக்கத்தான் பயன் படுமா? விடுதலையடைந்து நீ மணப்பாறையிலே படுக்கையில் கிடந்த நேரத்திலும்—பார்க்க வந்த என்னிடம், பரிவோடு கூறினுயே "பிழைத்துக் கொள் வேன்—நாட்டுக்கு மீண்டும் உழைத்தே சாவேன்" என்று! அந்த இன்பமொழி இனிமேல் என் இதயத்தில் ஈட்டிகளைப் பாய்ச்சிட மட்டுமே தான் பயன்படுமா?

மணப்பாறை நண்பனே! என் மனம் நிறைந்த தோழனே! மரணத்தின் மடியிலே உன் துரு துருப்பான விழிகள், நீண்ட நித் திரை கொண்டுவிடும் என்று நான் நினைக்கக் கூட இல்லையடா! திராவிடத்தின் கண்மணியே — தீயோரும் — பேயோரும் வீசிய வலையால் திறனழிந்து கிடக்கும் தாயகத்தை விடுவிக்கும் எல்லாப் போராட்டங்களிலும் நீ முன் அணியில் நின்றிருக்கிறுய் எனக் கேள்விப் பட்டபோது; நான் உன்னை அன்போடு தழுவிக் கொண் டேனே; ஆறுமாதம் தண்டனை என தீர்ப்பு பெற்றேமே; அரிய லூரிலே; அன்றைய தினம்! மூவரை அடைக்கும் கூண்டிலே நம்மை எண்மரை அடைத்துப் போட்டார்களே; அப்போது நீ தானே எங் களுக்குப் பெரும் பொழுது போக்காக இருந்தாய்; அதையெல்லாம் எப்படியடா மறந்து ஆறுதல் பெறமுடியும்!—அன்புப் பெற்றேரின் ஆசைத் திருமகனே! உன் கள்ளமில்லாக் கருவிழிகள் திறக்காமல் மூடிவிட்ட போது எப்படித்தான் துடித்தார்களோ; உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த வயறு, எப்படித்தான் கொதித் ததோ; தோளிலும் முதுகிலும் சுமந்து வளர்த்த உன் அன்புத் தந்தை என்னென்ன கூறிப் புலம்பினுரோ— அந்தக் கொதிப்பும், புலம்பலும் கொடியவர் அரசை நோக்கிப் பாய்ந்திடும் "சக்திவாய்ந்த சாபங்கள்" என்றாலும்—உன்னைப் போன்ற இளந்தளிர்களை-வாலிப ரத்தினங்களை — உயிரோடு பலி கொடுத்துத்தான் இந்தத் தரணியை மீட்டிட வேண்டும் என்கிற நிலை பிறக்கும்போது – தாங்க முடியவில்லையடா தங்கமே; அந்த வேதனையை! — நீ பிணமாகி விட்டாய்.— வாழ்க்கையின் மணத்தை சுவைக்காத வாலிபனே! நீ பிணமாக்கப் பட்டுவிட்டாய் — அடக்குமுறை அளித்த சிறைச் சாலையில் உன்னைப்பற்றிக் கொண்ட நோய்க்கு நீ பலியாகி விட்டாய்!

என்னுயிர்த் தோழனே! உன் பிணம் பேசட்டும்! — கல்லக் குடி வீரனே — களத்திலே என்னேடு நின்ற தீரனே! கலங்காத நெஞ்சனே! இன்று கல்லறையாகி விட்ட கட்டாணி முத்தனே! உன்பிணம் பேசட்டும்—"ஆறு பிணம் போதாதென்று ஏழாவது பிணமும் விழுந்து விட்டது! — ஆட்சியிலிருப்போரே; அதிகார பீடத்தில் அமர்ந்திருப் போரே! — என் பிணம் கடைசிப் பிண மாக இருக்கட்டும்; கல்லக்குடி அறப் போராட்டத்திற்கு கழகம் தரும் காணிக்கை நானுகவே இருந்துவிடட்டும் — இனியும் இது போன்ற காவுகளை எதிர்பார்க்காமல் — 'கல்லக்குடி' உதயமாகிட வழிவகுத்திடுங்கள்! காமராசரே! ஒரு திராவிடத்திருமகன்; இதோ — நான் பிணமாகி விட்டேன்; இனி யும் தாமதிக்காமல் — அடுத்ததோர் பிண வரி சையைப் பார்க்கலாம் என்ற அதிகாரப்பசிக்கு ஆளாகாமல்--வடநாட்டு இழிவின் சின்னத்தை உடனடியாக அழித்தெறியுங்கள்"

இப்படிப் பேசட்டுமடா கொள்கை வீரா, குமாரவேலா; உனது பிணம்! அந்தப் பேச்சு வீண் போகாது — இதோ உன்னைப்பறி கொடுத்து, கடமை — கண்ணியம் — கட்டுப் பாடு தவருத கண்மணியைப் பறி கொடுத் தோமே — என்று நாங்கள் விடுகிறோமே; இந்தப் பெருமூச்சும் வீண் போகாது-அண்ணு வின் தம்பியே! பொன்னுன இளைஞனே! என் ஆருயிர்த் தோழனே! என் வீர வணக்கங்கள் உன் கல்லறையின் அடித்தளத்தை தொடட் டும்!—பணிபுரிந்த படைவீரா! உன் பாத கம லங்களிலே படைத் தலைவன்என்ற முறையிலே என் மரியாதை மலர்களைக் குவிக்கின்றேன்; கன்னங்களில் வழியும் கண்ணீரைத் துடைக்க முடியாமல்!—வாழ்க நீ என்றும் வளமார் திரா விட நாட்டில்! வாழ்க நீ! வாழ்க நீ!




சென்ற இதழ் தொடர்ச்சி

5

இருளிலே ஓடிக்கொண்டிருந்த சந்தனத்தைப் பிடிக்க முடியாமல் திரும்பிய செல்வம், தன் காதலியாக இருந்த சித்ரா, தன் சொந்த சகோதரி என்பதை டைரியின் முதல் பக்கத்தைப் பார்த்ததும் உணர்ந்தான். உடனே இருவர் நெஞ்சிலும் நெருப்பு கொட்டியது போலாயிற்று நிலைமை.

ஃ ஃ ஃ

அங்கே, செல்வத்தின் வார்த்தை கேட்டு, உள்ளம் சிதறிப் போன சந்தனம், ஒரு மலைப் பாறையின் மீது வேகமாக ஏறிக் கொண்டிருந்தான். அந்த சாய்வான மலைப்பாறையின் உச்சியிலேயிருந்து, தன்னுடைய அலங்கோலமான உடலை சுக்கு நூருக்கிக் கொள்ளலாம் என்ற முடிவோடு மேல் நோக்கி நடந்தான். மண்ணின் அடித்தளத்தில் காலூன்றி, விண்ணின் விளிம்பைத் தொடுவது போல தன் உச்சியை நீட்டிக்கொண்டிருக்கும் அந்த சாய்வுப் பாதையிலே சந்தனம் சாவுப் பாதையை எண்ணி ஒரு விரக்தியான மகிழ்ச்சியோடு ஓடினன். உயர்ந்த பாறை—அதன் கீழே பயங்கரமான பள்ளம். அந்தப் பள்ளத்தின் முரட்டுத்தனமான அணைப்பிலே தன் உயிரைப் பிழிந்து கொடுத்து, சரீரத்தையும் சக்கை சக்கையாக ஆக்கிக் கொள்ளும் வெறியுடன் சந்தனம் ஏறினன்.

தற்கொலை செய்து கொள்வது தகாத பண்பு, கோழைகள் செயல் என்ருலும்—சாவதற்கு ஒரு அசாதாரணமான துணிவும் வேண்டும். அந்தத் துணிவோடு தான் சந்தனம் ஆகாயத்தை நோக்கி நிற்கும் அந்த ஆபத்தான குன்றிலே—மேல் நோக்கி ஏறினன்; கீழ் நோக்கி வீழ்ந்து சாவதற்காக!—அந்தப் பாறையின் உச்சியை அடைந்துவிட்டான். அவனுக்கு முன்பாக அந்த உச்சியிலே நின்று கொண்டிருந்த ஒரு உருவம் அவன் கண் முன்னே தெரிந்தது. அவனது வேகம் தணிந்தது. அந்த உருவம், பாறையின் முகப்பில் இருந்தபடி கீழ் நோக்கியவாறு, தேம்பி அழுதது—கடைசியாக, உரக்க ஒரு வார்த்தை வெளிப்பட்டது! "சந்தோஷமான சாவே! இதோ இந்த ஏழைக் குமுதாவை ஏற்றுக்கோள்!" அந்த வார்த்தையுடனே, அந்த உருவம், பாய்ந்திடத்தயாரானது. அதற்குள்-சந்தனம் அங்கே தாவிவிட்டான். தற்கொலை செய்து கொள்ளவந்தவன்—இன்னுமொரு உயிரைக் காப்பாற்றிடும் சூழ்நிலைக்கு ஆளாகிவிட்டான்.

குமுதா! குமுதா! ஆம்-அவன் நெஞ்சத்துக் கோட்டையை இடித்து எறிந்து விட்ட பெயர் தான் அது! அவனது உள்ளத்துப் பூங்காவிலே நுழைந்துவிட்ட சூருவளிதான் அது! அவனது இன்பகரமான வாழ்விலே விழுந்துவிட்ட இடி-தான் அந்தப் பெயர்! ஆனாலும் அந்தக்குமுதா, உயிர்விடப் போவதை அவனால் தடுக்காமல் இருக்க முடியவில்லை. அதே நேரத்தில்-தன்னை யாரென்று அவளிடம் காட்டிக் கொள்ளாமலே, அவளது வாழ்வின் திருப்பங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் ஆசைகொண்டான். மேல் அங்கியை எடுத்து நன்ருக முகத்தை மூடிக்கொண்டு, அவளோடு பேச ஆரம்பித்தான். அவளோ, நடுங்கியபடி நின்ருள். "யார்?" என்று சந்தனம் கேட்பதற்குள்ளாகவே, அவள் கேட்டாள்; "நீங்கள் யார்? என்னைத் தடுக்க?" என்ற . கேள்வியை! 'நானு? நானும் உன்னைப் போலத் தானம்மா தற்கொலை செய்து கொள்ள வந்தேன்-முதலில் உன் கதையைச் சொல்! பிறகு என் கதையைச் சொல்கிறேன். அதன் பின்னர் இருவருமே, சாவு உலகத்துக்கு பிரயாணத்தை ஆரம்பிப்போம்!" என்று சந்தனம் கூறினன். குரலை மாற்றிக் கொண்டு பேசினன் என்ருலும், அவ்வளது குரல் வளையை நெறிந்து விடலாமா, என்ற கேள்வி எழும்புகிற அளவுக்கு அவன் கோபத் தீயில் நின்று கொண்டு தானிருந்தான்.

"என் பெயர் தங்கம்" என்று கதையை ஆரம்பித்தாள் அவள்.

"முன்னுரையே—பொய்யுரையாக இருக்கிறதே—உன் பெயர் குமுதம் அல்லவா?" என்ருன் சந்தனம்.

"எப்படித் தெரியும் என் பெயர்?"

"இந்த ஏழை குமுதத்தை ஏற்றுக் கொள் என்று, மரண தேவதைக்கு மடல் அனுப்பினுயே, அது என் காதிலே விழுந்தது."

குமுதம் சற்று திகைத்து நின்ருள். பிறகு, தாழ்வான குரலில், "என் கதையை நீங்கள் கேட்க வேண்டாம்—தயவு செய்து என்னை சாகவிடுங்கள்" என்று அழுதாள்.

"நானும் சாகத்தானே வந்திருக்கிறேன்—உன் ரகசியக் கதையை கேட்டுக் கொண்டு போய்—நான் யாரிடம் சொல்லப் போகிறேன்; மேல் உலகத்தில் தான் சொல்லவேண்டும்—மேல் உலகம் என்று ஒன்று இருந்து அங்கே போய் உன் கதையைச் சொன்னல், இதைவிட பெரிய கதையெல்லாம் எம்மிடம் உண்டு, என்று மேனகையும்—திலோத்தமையும் ஊர்வசியும், ரம்பையும் ஓடிவருவார்கள்—ஆகையால் அங்கும் சொல்ல மாட்டேன்; பயப்படாமல் உன் கதையைக் கூறு!"

"குமுதம் என்று தான் என்னை அழைப்பார்கள். ஆனல் நான் அமுதமாக இருந்தேன்; அவருக்கு!"

"யாருக்கு? இதோபார் குமுதம்—இப்படி உட்கார்! உன் சோகச் சுமைகளை—புரியும் படி இறக்கு!—யாருக்கு நீ அமுதமாக இருந்தாய்?"

"அவருக்குத்தான்—என் அன்பருக்கு!—என் ஆருயிர் சந்தனத்துக்கு!"

இதைச் சொல்லும் போது குமுதம் உடலெல்லாம் நடுங்கியது. இருதய பாரத்தை கீழே போட்டு விட வேண்டும்—கண்களிலே பெருக்கெடுக்கும் நீரிலே சோகப் பெருங்கறகள் ஓரளவு கரைந்து விடவேண்டும்—என்ற ஆசையோடு அவள் மேலும் பேசினுள்—சந்தனம், கூடியவரை தன்னையாரென்று காட்டிக் கொள்ளாமலே அவள் பேசியதை கவனித்தான். ஆகாயத்திலே, நிலவு மேகத்திலே மறைவதும், வெளியே வந்து ஒளியைக் காட்டுவதுமாகத் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தது. சந்தனத்திற்கே குமுதாவின் கதைச் சுருக்கம் கிடைத்து விட்டது.

"சந்தனத்தை காதலித்தேன். வீட்டிலே அப்பா எதிர்த்தார். இருவரும் காதலை வளர்க்க—வெளியூர் ஓடினேம். செல்வன் பிறந்தான். என் அண்ணன் மலேயாவிலிருந்து திரும்பினன். எங்களை வெறுப்போடு நோக்கினன். என் அருமைச் சந்தனத்தின் அழகு முகத்திலே திரா கத்தை ஊற்றி அலங்கோலமா கினன். என்னையும் ஒ இரவிலே திருட்டுத் தனமா கடத்திச் சென்று, தனக்குள் செல்வாக்கின் காரணமாக பை த்தியக்கார விடுதியிலே சேர்த் விட்டான். பைத்தியங்களோ வாழ்ந்தேன். நாலரை ஆண் காலம் அப்படி வாழ்ந்தேன்

பின்னர் எனக்கு விடுதலை கிடைத்தது. அந்த வேதனை புரியிலிருந்து—அந்தப் பித்தர்களின் வேடிக்கை மண்டபத்திலிருந்து வெளிவந்தேன் — வெளிவந்த மறுநாளே என் சந்தனத்தையும், செல்வத்தையும் காணவேண்டுமென்று அண்ணனிடம் அழுதேன். அவனும் என்னைப் போகுமாறு விடையளித்தான். எங்கள் காதலின் தூய்மையைக் கருக்கிட இனியும் துணியேன் என்று வருத்தத்தோடு கூறி என்னை வழியனுப்பினன். வெளியூரிலேயிருந்த சந்தனத்தின் வீட்டுக்கு வரும் வழியிலே, ஒரு சிற்றூர். அதன் பெயர் பூரித்தார் குடி. அந்தப் பூரித்தார்குடி கிராமத்திலே ஒரு சாமியார் இருக்கிறார்; மிகவும் பெரிய மகான். அவரிடமுள்ள ஒரு கோழியை ஒரு வெறி நாய் கடித்து; அந்தக் கடிபட்ட கோழி, சாமியாரைக் கொத்தியதால் அவர் இறந்து சமாதியாகி விட்டார். அந்த சமாதியிலே தினந்தோறும் பேய் பிடித்த பெண்கள் ஆடுவார்கள். அவர்களின் நோய் நீங்கும், அந்த இடத்திலே நீயும் போய், கோழிக்கடி சாமியாரைக் கும்பிட்டு அருள் பெற்றுப்போ, என்று அண்ணன் சொல்லியனுப்பினன். அங்கேகோழிக்கடி சாமியாரின் சிஷ்யர் குஞ்சுக்கடி சாமியார் எனனைப்பற்றி விசாரித்தார். அந்தப் பெரிய மகானின் சிஷ்யர் எனக்கும் சந்தனத்துக்கு முள்ள காதலையும் அதில் குறுக்கிட்ட இடையூறுகளையும் நடந்தது நடந்தபடி சொன்னர். அதோடு, இனிமேல் நான்சந்தனத்தையோ அல்லது என் மகனையோ பார்க்கக் கூடாதென்றும்—என் ஜாதக பலன்படி, அப்படிப் பார்ப்பதால் உடனடியாக அவர்கள் இறந்து விடுவார்கள் என்றும் சாமியார் கட்டளை யிட்டார். என் ஜாதகத்தால் தான், என் காதலனின் முகம், கருகிவிட்டதென்றும் சாமியார் சொன்னர். என் கணவனும், மகனும் எந்த இடையூறுமின்றி சுகமாக வாழவேண்டுமானல் அவர்களுக்கும் எனக்கும் இனி தொடர்பே இருக்கக்கூடாதென்று அவர் கூறிவிட்டார். சந்தனத்தின் வாழ்வும், செல்வனின் வாழ்வும் வளப்பட்டால் போதுமென எண்ணிய நான், என்னை அண்ணன் வீட்டிலேயே மறைத்துக் கொண்டு வாழ ஆரம்பித்தேன். காதலன் முகமும், செல்வன் முகமும் என் இருதயத்திலே பதிந்திருக்கும்போது வெளிப்பார்வைக்கு அவை ஏன்—என்ற திருப்தியால் வாழ்ந்தேன். என்பார்வைபட்டு [illegible]கள் வாழ்வு பட்டுப் [illegible]ம். அத்துணை து[illegible] நான் பிறந்த [illegible] பிரிக்க முடியா[illegible] திரம் பிரித்து[illegible] தடைமீறி போ[illegible] என் அன்பு[illegible] உயிரல்லவா போய்விடும். ஆகவே என்னை ஒளித்துக் கொண்டு கிடந்தேன். திடீரென ஒருநாள், என் அண்ணனைக் கொலைசெய்து சந்தனம் சிறை புகுந்தார். ஆம், பழி தீர்த்துக் கொண்டார். என் அண்ணன் திருந்திவிட்டது அவருக்குத் தெரியாது—நானே அனாதையானேன். தந்தையை முன்பே இழந்து, தனயனையும் இழந்து தவித்த நான், தமையன் மனைவியையும் இழந்தேன். அவள் தனது குழந்தை சித்ராவை என்னிடம் ஒப்படைத்து மறைந்தாள். அந்தப் பர்மாக்காரி பெற்ற பைங்கொடி சித்ராவுடன் இந்தப் பக்கத்து ஊருக்கு, குடிவந்தேன்—சொந்த ஊரில் இருக்கப் பிடிக்காமல்! நோய் என்னை வாட்டியது-ஆம் மன நோய்தான்— சித்ராவுக்கு ஒரு காதலன் கிடைத்து விட்டான். யார் தெரியுமா அந்தக் காதலன்—என்மகன் — என் ஆசைச் சந்தனத்தின் அன்புக் கனி. அந்த செல்வனுக்கு என் அண்ணன் மகள் சித்ராவை திருமணம் செய்து வைக்க நான் என்ன மறுக்கவா போகிறேன். ஆனல் அந்தக் காட்சியை நான் பார்க்கக்கூடாதே! என் மகனும், மருமகளும் காதலர்களாகி விட்டார்கள். நானே அவர்களை வாழ்த்த முடியாது. அன்ெருரு நாள் குஞ்சுக்கடி சாமியார் கூறிய வார்த்தைகள் எனக்கு அணை போட்டன. அதோடு என் சந்தனமும் சிறையிலேயிருந்து திரும்பிவிட்டார். அவரையும் நான் பார்த்து விடக்கூடாது. ஆனல் எல்லோரையும் பார்க்கும் சந்தர்ப்பம், சித்ரா—செல்வம், திருமணத்தால் ஏற்பட்டுவிடும்—ஆகவே என்னுடைய கதை முழுதும் குறிக்கப்பட்ட டைரியை சித்ராவிடம் கொடுத்துவிட்டு, என் சந்தனத்தையும், செல்வத்தையும் காண முடியாத லோகத்திற்குச்சென்றுவிட முடிவு கட்டி இங்கு வந்தேன்''

என்று அழுது கொண்டே தன் கதையை முடித்தாள் குமுதம்.

குளமாகியிருக்கும், தன் விழிகளைக் காட்டிக் கொள்ளாமலே, சந்தனம் அவளிடம் கேட்டான்;

"அந்த சாமியார் என்ன சொன்னர்; சந்தனத்தை நீ பார்த்தால் உடனே அவன் செத்து விடுவான? அப்படித்தானே சொன்னர்?"

"ஆமாம் — அப்படித்தான் சொன்னர் — அந்த மகான்!"

"மகான்! அவன் ஒரு மலைப்பாம்பு! இதோபார் குமுதம், உன் சந்தனத்தின் முகத்தை!—சந்தனம் சாகிருனு பார்!" [illegible]று முக்காட்டை விலக்கி[illegible] சந்தனம்.

[illegible]த்திற்கு எதுவுமே புரியவில்லை. "ஆ!" என்று அலறியபடி அவனை அணைத்துக் கொண்டாள். அவனது அலங்கோலமான முகத்திலே மாறி மாறி முத்த மிட்டாள்.

"குமுதம் — என்னை மன்னித்து விடு! தவறான எண்ணத்தால் — நான் காதலைப் பற்றியே ஒரு தவறானமுடிவுக்குவந்துவிட்டேன்—அந்த சாமியாரைவிட்டு உன்னைஏமாற்றியிருக்கிறன்;உன் அண்ணன்!—நீயும் ஏமாந்து விட்டாய்—இதோ பார்! சாமியார் சொன்னது உண்மையானல் இப்போது நான் செத்திருக்க வேண்டுமே; மாருக, சாகப் போன என்னையல்லவா—உன் சுந்தரமுகம் காப்பாற்றியிருக்கிறது!'' என்று கூறியபடி அவளை, அவனும் ஆரத்தழுவிக் கொண்டான்.

அண்ணனின் சூழ்ச்சியால், ஏற்பட்ட விபரீதத்தை எண்ணி குமுதம் கண்ணீர் வடித்தாள். உடனே இருவரும், சித்ராவையும் செல்வத்தையும் பார்த்திட ஓடினர்கள். ஓடும்போதே சந்தனம் கூறினன் — "காதல் ஒரு தொடர்கதை — அதிலே சங்கடம் அனுபவிப்பவர்களும், சஞ்சலம் கோண்டவர்களும், சந்தேகம் பிடித்தவர்களும், சாவுக்குத் துணிந்தவர்களும் கதாபாத்திரங்களாக இருக்கிறர்கள். இத்தகைய கதாபாத்திரங்களை, ரோமியோ ஜூலியட்டிலே — லைலா மஜ்னுவிலே, கிளியோபாட்ரா காதலிலே – ஒத்தல்லோ கதையிலே, மும்தாஜ் காவியத்திலே, அம்பிகாபதி ஓவியத்திலே பில்ஹணுவிலே, இன்னும் பிறவற்றிலே காணுகிறேம். அந்தச் சிறுகதைகள் முடிந்து விடலாம். ஆனல் காதல் என்னும் தொடர்கதை உலகம் உள்ளவரை முடியவே முடியாது. இன்ப முடிவுகளும், சோக முடிவுகளும் பின்னிப் பின்னிவரும் காதல் ஒரு பெரிய தொடர் கதை தான்''

இந்த உண்மையை, ஏதோ, புதிதாக கண்டு பிடித்துவிட்டது போல அவன் குமுதாவின் குளிர்க்கன்னங்களில் முத்தமிட்டான். அப்பா! எத்தனை ஆண்டுகளாகிறது; அவளது கன்னம்—காதலனின் ஈர உதடுகளால் ஸ்பரிசிக்கப்பட்டு!

இருவரும் வீடு நோக்கி ஓடினர்கள் "சித்ரா சித்ரா!" என அழைத்தபடி உள்ளே ஓடிய குமுதம் — "அய்யோ" என அலறினள். சித்ராவும், செல்வனும், தூக்கு மாட்டிக்கொண்டு பிணங்களாகத் தொங்கினர்கள்,

"தவறு செய்துவிட்ட சகோதரர்களை—உலகமே! மன்னித்து விடு!" என்று சுவற்றிலே கரியால் எழுதப்பட்டிருந்தது.

குமுதா கதறினள். சந்தனம் சுவற்றிலே முட்டிக் கொண்டான். என்ன செய்தால் என்ன;

## மு. க. கார் விபத்து

பரமக்குடி பொதுக் கூட்டத்தை முடித்துக் கோண்டு திருச்சி நிகழ்ச்சிக்காக வந்து கோண்டிருக்கும்போது கார் விபத்துக்குள்ளான ஆசிரியர் மு. கருணாநிதியும் தோழர்கள் தருமு, பராங்குசம் ஆகியோரும் தற்சமயம் நலமாகஇருக்கிறர்கள். ஆசிரியருக்கு மூக்கில் ஏற்பட்ட காயமும், ஆறிவருகிறது. தற்போது அவர் தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணத்திலிருக்கிறர்.

கருகிவிட்ட மொட்டுக்கள் மலரவாபோகின்றன, "நீங்கள் சகோதரர்கள் இல்லை! இல்லை!" என்று குமுதம் அலறினள். அவளது டைரியோ நெருப்பிலே எரிந்து கிடந்தது. "அய்யோ — இந்த முழுதும் படிக்க வில்லை போலும் — அதனலேயே என் தங்கங்கள் தங்களைத் தவருகப் புரிந்து கொண்டன" என்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள் குமுதா! "காதலர்கள் அவசரக்காரர்கள்" என்ற ஒலி சந்தனத்தின் இருதயத்திலே எழுந்தது.

இளம் தளிர்கள் இரண்டும், தங்களுக்கு மூத்தவர்கள் செய்த மூடத்தனத்திற்கு இரையாகி — பிணங்களாகத் தொங்கிக் கொண்டே,

"காதலோர் தொடர் கதையே!" என்ற பாட்டை, பாடாமல் பாடிக் கொண்டிருந்தார்கள்.

(தொடர் கதையென்னும் சிறுகதை முடிந்தது)

## கருணாநிதி--இளங்கோ எஸ். எஸ். ராஜேந்திரன் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயணம்

ஜுன்

4 ஒட்டன் சத்திரம் — (திருமணம்)

5 கீழ நம்மங்குறிச்சி — தலைஞாயர்

6 திருப்புகலூர் — நெடுங்குளம் — பொறையார்

7 சீர்காழி

8 மாயூரம்

11, 12, 13 நாஞ்சில் மாவட்டம்.




நேருவின் நிர்வாக வேகம்?:—மாற்றுக்கட்சிகளைப் பற்றி மின்சார வேகத்தில் அநாகரிக வார்த்தைகளை அள்ளிக் கொட்டும் நேருஜி—தன் மந்திரிசபை நிர்வாகத்தை எவ்வாறு நடத்துகிறார் என்பதுதான் இந்த கார்ட்டூனில் சித்தரிக்கப் படுகிறது.


# சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக் கூடம்

கருணாநிதி பார்க், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

உயர் நிலைப்பள்ளி, கல்லூரி, எஞ்சினீயரிங் பரீட்சைகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

**ஆரம்பம் 9—6—54**

மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிப்பதில் திறமையும் அனுபவமும் மிக்க பேராசிரியர்கள் உள்ளனர்.

திரு. என். ஜே. தேவதாஸ் எம். ஏ., திருமதி ஜூடித் லூயிஸ் பி. ஏ. (ஆனர்ஸ்), திரு. ஐ. திவ்வியநாதன் பி.ஏ. (ஆனர்ஸ்), வெங்கடராமன் எம்.ஏ. எல். டி., என். பிச்சை பி.ஏ. (ஆனர்ஸ்), எம். வெங்கட்ராமன் எம். ஏ. பி. (காம்) என். எஸ். கிருஷ்ணசாமி எம். ஏ., வி. துரைராஜ் பி. எஸ்சி. பி. டி., ஆர். ஜான்ஸன் பி. ஏ. பி டி., ஜி. ரத்தினம் பி. எஸ்சி. எ. பாலசுப்ரமணியன் பி. எஸ்சி. டி. எ. சாமி (விஷாரத்) வித்வான் சோழகர், கே. ஜான் பி.ஏ., லூயிஸ் பீட்டர் பி. எ., ஆர். சுப்ரமணியன் பி. ஏ., சி. சாமி பி. ஏ.

எஞ்சினீயரிங்:—திரு. எம். பாலகிருஷ்ணன் பி. ஈ., எம். கே. நடராஜன் பி. ஈ., பி. சங்கரன் பி. ஈ.

**வைஸ் பிரின்ஸிபால்**
திருமதி. ஜூடித்லூயிஸ் பி. ஏ. (ஆனர்ஸ்) (கோவை அரசினர் கல்லூரி முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர்)

**பிரின்ஸிபால்**
திரு. என். ஜே. தேவதாஸ் எம். ஏ. (திருச்சி நகரில் தனிப்பயிற்சி கூடங்களை நிறுவியவர்களில் முதன்மையானவர்)

**அலுவலகம் :**
16, நந்தி கோவில் தெரு, தெப்பக்குளம் பி.ஓ., திருச்சி

செயலாளர்.
ஐ. திவ்வியநாதன் பி. ஏ. (ஆனர்ஸ்)

**விபரங்களுக்கு நான்கணா** ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்.

செயலாளர் **சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக் கூடம்**
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.


# "பெரியகுளம்——சிறிய மீன்கள்"

[ஒரு விளக்கம்]

"முரசொலி" 23—4—54 ம் நாள் இதழில் "பெரிய குளம், சிறிய மீன்கள்" என்று வெளிவந்த அரசியல் கற்பனைக் கட்டுரையில்—மீன்கள் எல்லாம் மாநாடுகூட்டி, எல்லோரும் குழம்புக்குப் போய்விட்டார்கள்—கெண்டை செட்டியார், விலாங்கு அய்யர், விரால் நாடார், நண்டு நாய்க்கர், கோரவை முதலியார் அனைவரும் குழம்புக்குப் போய்விட்டார்கள்; நாமும் போக வேண்டும் என்று மீன்கள் பேசுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் "**நண்டு நாய்க்கர்**" என்பது **வன்னியப் பெருமக்களை** கிண்டல் செய்து எழுதப்பட்ட தொடர் என்று ஒரு சில விஷமிகள் எழுதியும் பேசியும் வருகிறார்கள். அந்த விஷமிகளுக்கு இருக்கிற அக்கரையைவிட, வன்னியப் பெருமக்களின் நல்வாழ்விலே நமக்கு அக்கரையும் கவலையும் அதிகம். ஆகவே எந்தவிதமான உள் நோக்கமும், தவறான எண்ணமும் கொண்டு அந்த வார்த்தை எழுதப்படவில்லை என்பதோடு, வன்னியப் பெருமக்கள், உண்மையிலேயே தங்களுக்கு துரோகம் புரிந்து பதவியில் ஒட்டிக் கொண்ட தோழர்களின் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். நாய்க்கர் என்பது வன்னியர் குலத்தில் உள்ளவர்களை மட்டுமே குறிப்பிடுவது அல்ல. நண்டு என்பது, மற்ற மீன் வர்க்கங்களை குறிப்பிட்டது போலவே குறிப்பிடப்பட்ட ஒரு சொல்—இதை விஷமிகளின் துர்ப்பிரச்சாரத்தில் மயங்கியிருக்கும் நல்லவர்கள் கவனித்திட வேண்டுகிறோம்.

— **ஆசிரியர்.**

## முகவரி மாற்றம்

★

**'முரசொலி'**

62. எஸ். பி. சன்னதித் ெ...
இராயப்பேட்...
சென்னை-...

...ர் விடுதலை

...11 மாதங்களாக ... தூத்துக்குடி ...ளான இரா சு. ...ஸ். சிவசாமி, ... கே. வி. கே. ... தோழர்களை ...று சென்னை ...ம் 26ம் தேதி ...ளது.

# கலைக்கோட்டம்

# பகுத்தறிவுப் பரிதி—இங்கர்சால்

○

கடவுளை முன் நிறுத்தி உலகம் காராக்கிரகமாக மாறிக் கொண்டிருந்த காலம் —

வேதம் சொல்லும் வேதியர்களை நாசம் செய்தாலும் நல்ல மனிதர்கள்—மாநிலம் காப்போர்—மன்னனை மிஞ்சியோர் — மரியாதைக் குரியோர் என்ற வாதம் சுட்டாயமாக்கப் பட்டுக் கொண்டிருந்த நேரம் —

"கடவுளா?" என்று கேள்விக் குரல் எழுப்பினால், "கபோதியே! கண்ணிய மற்றவனே! இறைவனை இகழ்ந்த இழி மனிதனே!" என்று 'சந்தேகித்தவ'னின் கழுத்திலே கட்டாறி பாய்ச்சிய அந்த வேதனையான வேளையில் —

ஒரு குரல்—ஒரே ஒரு குரல் எழும்பியது, இருண்டு கிடந்த சமுதாயத்தில் ஒரே பகுத்தறிவுத் தீபமாக!

"பரமன் துதி பாடும் என் நண்பர்களே! பாருங்கள் அதோ, மரணத்தை அணையப் போகும் பச்சிளம் சிசு—சக்தியற்ற தன் வெளிறிய உதடுகளால் மாண்டு விட்ட மாதாவின் துவண்டு போன மார்பகத்தைப் பிடித்திழுக்கும் பரிதாபத்தை! ஐயகோ! இத்தகு கோரத்தின் 'உற்பத்திப் பொருள்' எது தெரியுமா, தோழர்களே? நீங்கள் தொழும் இறைவன் இருந்தால் அவன்தான்—அந்தக் 'கற்பனை கடவுள்'தான்!"

'கடவுளே கதி' என்றிருந்தோருக்கு மத்தியிலே இப்படி கருத்துச் சொற் கோர்வைகள் அள்ளித் தெளிக்கப்பட்டன.

கேட்டவுடன் சீறிப்பாய்ந்தனர் கெடுமதியினர் கூட்டமாக! கடவுளை இகழ்ந்தோனின் நாவைத் துண்டிப்போம் என்று துடிதுடித்து எழுந்தனர் மத குருக்கள் ஏராளமாக!

ஆனல்,

காட்டாற்று வெள்ளம் போல எதிர்ப்புகள் பாய்ந்து வந்த போதிலும் அந்தக் கடமையாளன் சோர்ந்துவிடவில்லை. "ஒழித்துக் கட்டுவேன்" என்று அலறியோரின் தீச் சொற்களை 'பாராட்டுரை'களாக பாவித்தான் கத்திகளுக்கும், கட்டாறிகளுக்கும், கர்ண கடூர எதிர்ப்புக் கூச்சலுக்கு மிடையே தனது பகுத்தறிவு கீதத்தை இசைக்கத்தான் செய்தான், அந்த புத்துலக சிற்பி — புன்மைகளைப் புரட்டித் தள்ளிய புதுமைப் புயல்—இலட்சியவீரன் இங்கர்சால்!

உலகத்திற்கு அறிஞர்கள் பலரை அறிமுகப்படுத்திவைத்த அமெரிக்க மண்ணில்தான் ராபர்ட் கிரீன் இங்கர்சாலும் பிறந்தார். நியூயார்க் மாகாணத்தில் உள்ள ட்ரேஸ்ட்டன் என்ற இடம்தான் அவரது பிறப்பிடம். 1833–ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 11ம் தேதி தான் அவரைப் பெற்றெடுத்த புனித நாள்.



மதத்தின் பரம வைரியாக இங்கர்சாலை மாற்றிய பெருமை ஒரு வகையில் அவரது தந்தையைத் தான்சேரும் ஏனெனில் அவரே ஒரு மதகுரு — பாதிரியார்! பிறந்த இரண்டாவது ஆண்டில் பெற்றவளை இழந்த இங்கர்சால், வேதம் படிக்கத்தான் வேண்டும் என்ற தனது தந்தையின் வேதனையானகட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியவரானார். படித்தார்—நிறைய படித்தார்—சிந்தித்தார்—வேதத்திலேநிறைந்திருந்த பேதங்களைப் புரிந்தார்!

கல்லூரிப் படிகளில் பலகாலம் ஏறியிறங்காவிடினும், வேதப் புத்தகங்களின் ஒவ்வொரு எழுத்திலும் புகுந்து புறப்பட்டார் இங்கர்சால். அந்த விவேகத்தின் விளைவாகத்தான் பத்தொன்பதாவது வயதிலேயே பாடல்கள் இயற்றினர். இருபதாவதுவயதில் சொந்த முயற்சியால் ஒரு இலவசப் பள்ளி நிறுவினர். இருபத்தொன்ருவது வயதில் சட்டம் கற்ற வழக்கறிஞரானர். பிறகு போர்வீரனுகவும்பணியாற்றினர்.

இந்த வகையான சமூகத் தொண்டுகள் அவருக்கு-அவரது இலட்சியத்துக்குப் பெரிதும் பயன்பட்டன. கவிதைகள்எழுதி வெளியிட்ட காரணத்தால்தனது கொள்கைகளை மக்கள் மன்றத்தில் நடமாடவிடலாம் என்ற துணிவு பெற்ருர். இலவசப் பள்ளி அவரது ஈகைக் குணத்தை நாட்டுக்குப் பகிரங்கப் படுத்தியது. வழக்கறிஞராக பணியாற்றிய காலம், கொலை வழக்கிலே சம்மந்தப்பட்ட ஈவா பார்க்கர் என்ற பெண்ணை அவருக்கு காதல் மனைவியாகத் தேடித் தந்தது. போர்வீரராக களம் புகுந்த தொண்டு அவருக்கு 'கர்னல்' என்ற சிறப்புப் பெயரை வழங்கிற்று.

சமுதாயத்தின் ஒவ்வொரு கோணத்தையும் இப்படிப்பட்ட துறைகளில் நின்று நன்ருகப் படமெடுத்துக் கொண்டார் இங்கர்சால். ஆனல் 'பழைமைக் கோட்டையைத் தகர்த்தெறியும் வலுவான சம்மட்டி' அவர் என்பதை உலகிற்குஅறிமுகப்படுத்தியது1860-ம்ஆண்டிலேஅமெரிக்க 'காங்கிரசு'க்கு நடைபெற்ற தேர்தல் தான். அவர் தேர்தலில் போட்டியிட்டார்'பெரும் புள்ளி' ஒன்றுக்கு எதிராக! முடிவிலே புள்ளிதான் அரசவை அடைந்தது. என்ருலும் இங்கர்சாலின் புலமையும், புரட்சிக் கருத்துகளும், பேச்சு வன்மையும் அழியாமுத்திரையாக பதிய ஆரம்பித்தது.

இங்கர்சால் அப்போதுதான் பேசத் தொடங்கினர். வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் புதுமை கருத்துக்களைப் பூசி வீசினர்.

அந்த சொற்போர் மன்னனின் சொல் வீச்சிலே மத வெறி சாடப்பட்டது! கடவுள் கொள்கை அலசப்பட்டது! மத குருக்களின் மதோன்மத்த செயல்கள் – வெறியாட்டங்கள்—அனைத்தும் வெட்ட வெளிச்சமாக்கப் பட்டன!

பொங்கி எழுந்த மதப் பித்தர்களின் முன், கேலியும் கிண்டலும் நிரம்பிய தனது கருத்துப் படையலை எடுத்துத் தந்து அவர்களை பேசாமடைந்தைகளாக ஆக்கினர் இங்கர்சால். ஆனல் தங்களது 'வாழ்வுப்பிரச்னை'க்கே உலைதேடும் அவருக்கு வாய்ப் பூட்டு போடும் செயலில் குதித்தார்கள் மதவெறியர்கள்.

தன்மான முள்ளோரை தலை வணங்கும் தாசர்களாக்க தறுதலைகள் என்றும் உபயோகிக்கும் கருவி — ஒன்று பாவை; அடுத்தபடியாக பணம்!

ஆனல், இங்கர்சாலின் முன்னே அவர்கள் நீட்டியதோ பதவி! இல்லியனுஸ் என்ற பிரதேசத்தின் கவர்னர் பதவி அவரைத் தேடிவந்தது, அவரது கருத்துப் புரட்சியை குலைக்கும் நோக்கோடு. ஆனல் அந்த கொள்கைவெறி பிடித்தவரோ பதவிவெறிக்கு இலக்காகவில்லை; உதறித் தள்ளின[illegible] அப் பெரும் பதவியை! அ[illegible]

"இந்த உலகத்துக்கே ஓரே தலைவனுக ஆவதாயினும் என் மன உணர்ச்சிகளில் ஒன்றையேனும் என்னல் அடக்கி விரட்ட முடியாது!"—என்ற உண்மையையும் உரைத்தார்.

இங்கர்சால் மேடை ஏறியவுடன் பொருளைத் தெரிந்து பேசத் தொடங்கும் பழக்கத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆறுமாதகால அமைதியிலும் — தனிமையிலும் — ஆழ்ந்த யோசனையிலும் — அரிய சிந்தனையிலும் அவர் கருத்துக்களைத் தேடிப் பிடிப்பார் — சொற் பொழிவை உருவாக்குவார். பிறகு ஆறுமாத காலம் இடைவிடாது மேடை மேடையாகப் பேசுவார்.

இங்கர்சாலின் 'மனிதன் மங்கை, குழந்தை, அவர்தம் சுதந்திரம்' என்ற சொற்பொழிவுதான் முதன் முதலில் மக்கள் மன்றத்திலே பெரும் விழிப்பை ஊட்டி வாழ்த்துகளையும் பெற்றது. பிறகு 'வைதீகம்' 'எவ்வழி' 'பொய்யும் அற்புதமும்' 'வேத புத்தகம்' என்ற பொருட் புதையல்களைத் தேடிக் கொடுத்தார். அவரது சொற் பொழிவுகள் அனைத்திலும் அழியாப் புகழ்பெற்றது, அவர்கடைசியாக பாஸ்டன் நகரில் நடத்திய 'மதம் என்றால் என்ன?' என்பதுதான். இந்தப் பேச்சுக்கு எதிராக பெரும் எதிர்ப்புப் புறப்பட்டது அவருக்கு. அக்கால அரசியல் அறிஞர்களில் ஒருவரான கிளாட்ஸ்டன் என்பார்கூட "இங்கர்சால் பழக்கப்படாத காட்டு மிராண்டிக் குதிரையின் மீது சவாரி செய்வதோடன்றி கடிவாளத்தின் கயிறுகளையும்அதன் கழுத்திலேயே எறிந்து விடுகிருர்" என்று கூறி அவருடைய மதவாதத்தைத் தாக்கினர்.

அதற்குப் பதில் கூறத் தயங்கவில்லை இங்கர்சால். "இறந்த குதிரையின்மேல் பயபக்தியுடன் உட்கார்ந்திருப்பதைவிட எனது சவாரி கீழானதல்ல"என்று கூறி கிளாட்ஸ்டனை மீண்டும் வாய் திறக்காதபடிச் செய்து விட்டாராம்.

சமூகத்தொண்டு என்று இறங்கினல் வறுமையின் அரவணைப்பிலும் சிக்கத்தான் வேண்டும் என்ற 'உலக நியதி'க்கு விதிவிலக்காக நின்ருர் இங்கர்சால். அவர் காலத்தில் பேச்சின் மூலம் பொருள் ஈட்டி, அதிக வருமான வரி கட்டியவர் அவர் ஒருவர்தானும்!

இத்தனைச் சிறப்புகளையும் பெற்ற சிந்தனையாளன் இங்கர்சாலின் இணையிலா சொற்பொழிவுகள் அமெரிக்காவில் மட்டுமல்ல; அகில உலகத்திலும் பெரும் பகுத்தறிவுத் தீயைப் பரப்பியது. ஆனல் அப்பெரும் தீயைக் கிளப்பிய சிறு பொறியோ தனது 66-வது வயதில் 'பட்'டென்று அணைந்தது.

ஆழ்கடலின்கர்ப்பத்திலிருந்து பகுத்தறிவு முத்தெடுத்த அந்த புதுமை விரும்பி மறைந்தான்—ஆனல் அவனது உதட்டசைவிலே உதிர்ந்த உள்ளக் கருத்துக்கள் மறையா மாணிக்கங்களாகி விட்டன.

# கடைசிப்பக்கம்

லீலாராம், பெங்களூர்.

(?) புதுக் கல்வித் திட்டத்தை ஒழித்துவிட்ட காமராசர் மந்திரி சபையை தி. மு. கழகம் ஆதரிக்குமா?

பாராட்டுமே தவிர ஆதரிக்காது! நாம் கோரும் திராவிட நாடு தனியாகப் பிரிந்து அரசோச்ச வேண்டுமென்று விரும்புகிற மந்திரி சபையைத் தவிர வேறு எந்த மந்திரி சபையையும் தி. மு. கழகம் ஆதரிப்பது இயலாது.

வி. எஸ். தாமோதர், சென்னை.

(?) கல்வித் திட்டத்தை கடலில் போட்டு விட்டு கையைக்கூவம் நதியில் கழுவி விட்டார்கள் என்று கல்கி எழுதியிருக்கிறதே, அதன் பொருள் என்ன?

கல்கிக்கு ஆத்திரம் ஏற்படாமல் இருக்குமா? அதன் பேனாவுக்கு போட வேண்டிய மையில் கை கழுவி அதை வீணாக்கலாமா?

வன்னியநேசன். ஆரணி.

(?) மந்திரி மாணிக்கவேலர், கதர் அணிபவனை முதல்தர பிரஜையாகவும், கைத்தறி அணிபவனை இரண்டாந்தர பிரஜையாகவும் கருதுவதாக கூறியிருக்கிறாரே அது பற்றி உங்கள் கருத்து என்ன?

கதர், கைத்தறி, சீமைத்துணி இவைகளை காலத்துக்கேற்றபடி—பதவிக்காக, அணியும் இவரை யாரும் மூன்றாந்தர பிரஜை என்று கூறி விடக் கூடாதே என்பதற்காக, முந்திக் கொண்டிருக்கிறார்; அவ்வளவுதான்!

(?) "லோக்சபா" என்பதின் அர்த்த மென்ன?

"ஷோக்சபா" என்பதுதான் எமக்குத் தெரிந்த அர்த்தம்.

கே. மாணிக்க சுந்தரம், காரைக்கால்.

(?) புதுவை-திரு குபேர், தன் பெயரை இ. ஜி. பிள்ளை என்று ஏன் மாற்றிக் கொண்டார்?

ஜாதிப் பிரிவினைகள் தாண்டவமாடும் இந்திய யூனியனில் சேரப் போகிறார் என்பதற்குத்தான் சுருட்டியிருந்த வாலை நிமிர்த்திக் கொண்டார், "பிள்ளை" என்று!

ஒரு நடிகன்—நாகர் கோயில்.

(?) தென்னிந்திய நடிகர் சங்கத்தில் இடம் பெற்றுள்ள ஒரு நகைச் சுவை நடிகர், அதே சங்கத்தில் இடம் பெற்றுள்ள இன்னொரு பிரபல நடிகரை கிண்டல் செய்து இப்போது வந்துள்ள ஒரு படத்தில் நடித்திருக்கிறாரே; அது சரியா?

தென்னிந்திய நடிகர் சங்க செயலாளர் திரு எம். ஜி. ஆர். அவர்கட்கு எழுதிக் கேளுங்கள்.

தேவராசன்—சென்னை 28.

(?) உலகத்தில் முதன் முதலில் தோன்றியது கல்லா? மண்ணா?

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே"—என்ற வரிகளை கேள்விப்பட்டிருப்பீர்களே; தோழரே!

அன்புமணி—ஷெணாய் நகர்.

(?) பகுத்தறிவூட்டும், நாடகங்கள், சினிமாக்களை பார்த்து மக்கள் திருந்த முடியாது என்கிறாரே, ஒரு ஆசிரியர்—அது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

அந்த ஆசிரியர் நடத்தும் "ராமாயண காலட்சேபம்" கேட்டுத்தான் மக்கள் திருந்துவார்கள் என்று அவர் எதிர்பார்க்கிறார் போலும்.

திருநாவுக்கரசு—அரியநாச்சி.

(?) "பூர்ஷுவா" என்றால் என்ன?

இந்தியாவில் ஒரு அரசியல் கட்சியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிற ஒரு வார்த்தை!

## என்ன சொல்லப் போகிறார்?

"நான்கு நாள் சுற்றுப்பயணத்திற்கு ஒரு லட்ச ரூபாய் செலவா? இதுதகுமா? முறையா?" என்று சட்டசபையில், நேரு வருகைக்கென செலவு செய்தது குறித்து எதிர்கட்சிக்காரர்கள் கேட்டார்கள். அதற்கு கனம் சுப்ரமணியம் பிரதமரைப் பார்க்க ஏராளமாக கூடுகிறார்கள் மக்கள். எதிர்கட்சிக்காரர்கள் வேறு, பொறாமையால் ஆர்பாட்டம் செய்கிறார்கள். அதற்காக 'பக்கா' வான போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டது என்றார். ஆனால் மேலிடத்திலிருந்து தாக்கீது வந்திருக்கிறதாம், ஏன் இவ்வளவு செலவு என்று.

டில்லி மூலஸ்தானத்திற்கு சுப்ரமண்யம் என்ன பதில் சொல்லப் போகிறார்? இந்தியப் பிரதமர் வந்தால், எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்ப்பு நடத்துகிறார்கள் — அதைத் தொடர்ந்து பொது மக்கள் கூடுகிறார்கள். இதனால் போலீஸ் பந்தோபஸ்துக்காகச் செலவு இத்தனை ஆயிரம் என்று சொல்லுவாரோ, அல்லது ஆச்சாரியாரைத் தேடி ஓடுவாரோ தெரியவில்லை.




... கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிட்டப்பட்டு, வெளியிடப்படுகிறது. அலுவல ...